உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.446 /2021

| | |
|---|---|
| பெயர் | :பதினெட்டான்(அ.சா.6) |
| தகப்பனார் பெயர் | : பழனியாண்டி |
| கணவர் பெயர் | : |
| வயது | :59 |
| கிராமம் | :ஆட்டுக்குளம் |
| வட்டம் | :மேலூர் |
| தொழில் | :கிராம உதவியாளர், மேலூர் |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

01.04.2025

முதல் விசாரணை:

ஆஜர் எதிரிகளில் சந்திரனை மட்டும் தெரியும். அவர் எங்களுடன் வேலை பார்த்து வருகிறார். சம்பவம் பற்றி எதுவும் தெரியுமா என்றால் 14.07.2017 அன்று பகல் 11.00 மணியளவில் மேலூர் காவல்நிலையத்தார் கையெழுத்து போடச்சொன்னார்கள் நான் கையெழுத்து போட்டேன். சந்தைபேட்டையில் சண்டை நடந்ததாகவும், அதுதொடர்பாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். சாட்சியிடம் கைப்பற்றுதல் அத்தாட்சி காட்டப்பட்டு 2வது கையெழுத்து தன்னுடையது என்று ஒப்புக்கொண்டதன் பேரில் மேற்படி கையெழுத்து அ.சா.ஆ.2 மற்றும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சியிடம் ஒப்புதல் வாக்குமூலம் காட்டப்பட்டு அதில் உள்ள 2 வது கையெழுத்து தன்னுடையது என்று ஒப்புக்கொண்டதன் பேரில் மேற்படி கையெழுத்துகள் மட்டும் அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் தெரிந்து கையெழுத்து போட்டேனா என்றால் அது தெரியவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது).

அ.த.கு.வி :

கடந்த 14.07.2017ம் தேதி காலை 8.00 மணிக்கு நானும், என்னுடைய கிராம நிர்வாக அதிகாரி சித்ராவும் பணியில் இருந்த போது மேலூர்

காவல்ஆய்வாளர் குற்ற எண்.740/2017 என்ற வழக்கில் 1 மற்றும் 2 வது எதிரிகளை மேலூர் ஜெயில் கேட் அருகில் கைது செய்து வைத்திருப்பதாக கொடுத்த தகவலின் பேரில் நானும், கிராம நிர்வாக அதிகாரி சித்ராவும் சம்பவம் இடம் சென்று ஆஜர் 1, 2 எதிரிகளை எவ்வித அச்சுறுத்தலும் ஆசைவார்த்தையின்பேரில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுதிட்டுவிட்டு, அதன்பேரில் 1,2 எதிரிகள் எடுத்து ஆஜர் செய்த அரிவாளையும், கத்தியும் உள்ள பார்வை மகஜரில் கையெழுத்து போட்டு மேலும் 18.07.2017ம் தேதி மதியம் 2.30 மணிக்கு இவ்வழக்கின் எதிரி ராமன்பாவு என்பவரை கைது செய்து வைத்திருந்ததாகவும் அதில் நானும் கிராம நிர்வாக அதிகாரியும் அவர்கள் இடத்திற்கு சென்று எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்திட்டுவிட்டு அதன்மூலம் நாவினிப்பட்டி ஆண்டுஊரணி அருகே எதிரி எடுத்து ஆஜர் செய்த மூங்கில் கட்டையையின் பார்வை மகஜரில் கையெழுத்திட்டுவிட்டு இந்த வழக்கின் 2வது எதிரி தன்னோடு கிராம நிர்வாக உதவி அலுவலராக பணிபுரிவதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க போலிஸ் விசாரணையில் உண்மைசம்பவத்தை கூறிவிட்டு தற்போது மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.04.01 17:30:08 +0530

Assistant Sessions Judge

Melur